நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## S.T.C No. 599/2020

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுகவுண்டர் |
| கிராமம் | : | பொன்னகர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 3** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 21–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.28PM)

1. நான் தற்போது பொன்னகரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கல்லூரியில் பேருந்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா1 என்னுடைய மகள். ஆஜர் எதிரி என்னுடைய மருமகன். என் மகளுக்கும் மருமகனுக்கும் பிரச்சினை ஏறபட்டு தனித்தனியாக வசித்து வருகிறார்கள்.

என்னுடைய மகள் அ.சா1 என்னுடைய வீட்டில் தான் குடியிருக்கிறார். 2020ம் வருடம் இரவு 8.30 மணி அளவில் நான் என்னுடைய மனைவி, என்னுடைய மகள் ஆகியோர் என்னுடைய வீட்டில் இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி எனது மகளிடம் தன்னுடன் சேர்ந்து வாழ வருமாறு கேட்டார்.

2. எனது மகள் வாழ தயார் என்று சொன்னபோது ஆஜர் எதிரி எனது மகளின் கழுத்தில் நகத்தால் கீறினார். எனது மகளின் தலை முடியை பிடித்து இழுத்து முதுகில் அடித்தார். சண்டையை தடுக்க சென்ற என்னையும் எனது மனைவியையும் கீழே தள்ளி விட்டார். எனது மகளை மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. எனது மகளுக்கும் மருமகனுக்கும் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது. என்ன காரணத்தால் பிரிந்து இருக்கிறார்கள் என்றால் சிறு சிறு சண்டைகளால் பிரிந்து இருக்கிறார்கள். வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருக்கிறார். கடந்த நான்கு ஐந்து வருடமாக வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருக்கிறார். இந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்திருக்கிறார் என்றால் மேட்டூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேன். தேதி தெரியவில்லை. மருமகன் வீடு எங்கே இருக்கிறது என்றால் அரூரில் உள்ள வீரநாயக்கன்பட்டியில் உள்ள பூநகர் என்ற இடத்தில் உள்ளது. எனது மகள் 2016 லிருந்து எனது வீட்டில் தான் உள்ளார். திருமணமாகி ஏழு மாதத்தில் பிரிந்து விட்டார்.

2. மருமகன் தான் மகளுக்கு எதிராக விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது மகள் மருமகனுக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் DVC 2/2017 என்ற வழக்கை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். இரண்டாவது மகளுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. நான் விவேகானந்தா கல்லூரில் பேருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அங்கேயே தங்கி பணிபுரிகிறேன் என்றால் இல்லை.

3. சம்பவம் நடந்த தேதியில் நான் மனைவி சந்திரா, மூத்த மகள் மதுவந்தி, இளைய

மகள் கௌசல்யா, எனது தம்பி ரமேஷ்குமார் மற்றும் பேரன்கள் இருந்தார்கள். எங்கள் வீட்டை ஒட்டி சுமார் 40, 50 வீடுகள் இருக்கும். எனதுசம்பவத்தன்று முதலில் எனது மருமகன் எனது மகள் மதுவந்தியிடம் தான் பேசினார்.அப்போது எனது மகள் எனது மருமகளுடன் வர தயாராக இருப்பதாக சொன்னார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதுகுறித்து நான் எதுவும் சமாதானம் பேசி எனது மகளை அழைத்துச் செல்ல எனது மருமகனிடம் சொல்லவில்லை. எனது மகளின் இடது புறத்தில் தான் எனது மருமகன் நகத்தால் கீறினார் எந்த கையால் கீறினார் என்று நான் சரியாக பார்க்கவில்லை.

4. என் மகளுக்கு தலையில் உள் காயம் தான் ஏற்பட்டது. சத்தம் போட்ட போது சதீஷ், எனது தம்பி ரமேஷ், பாபு, சங்கர் ஆகியோர் அங்கு வந்தார்கள். சம்பவத்துக்கு பிறகு நான் காவல் நிலையத்துக்கு நேரடியாக போகவில்லை. அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக எனது மகளை சேர்த்தேன். அவசர உதவி எண் 100க்கு அழைத்து நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. கடந்த 2020 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் இந்த சம்பவம் நடைபெற்றது. தேதி சரியாக தெரியவில்லை. எனது தம்பி ரமேஷ் புகார் கொடுத்திருப்பார் என்று நினைக்கிறேன். அரசு மருத்துவமனை வந்து சம்பவத்தன்று போலீசார் விசாரித்தனர். அதன்பிறகு முதல் தகவல் அறிக்கை எப்பொழுது பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

5. எனது மகளை சம்பவத்துக்கு மறுநாளே சிகிச்சை முடிந்து நான் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டேன். வீட்டுக்கு வந்த ஓரிரு தினங்களுக்கு பின்னிட்டு போலீசார் மீண்டும் விசாரித்தனர். இந்த சம்பவம் இரவு 8.30 மணிக்கு நடந்தது. எனக்கு குடிப்பழக்கம் உள்ளது. எனது இளைய மகள் கௌசல்யாவை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் சொன்னவாறு நடைபெற்று இருந்தால் எனது மகள் உடனடியாக காவல்துறையில் புகார் அளித்திருப்பார் என்றாலும் ஏற்கனவே உள்ள பிரச்சனையை மனதில் வைத்து எனது மகள் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. எனது மகள் நீண்ட காலமாக என்னுடன் இருப்பதால் நான் தான் எனது மகளுடன் சண்டை போட்டுக் கொண்டேன் என்றாலும் அது குறித்து எனது மருமகனுக்கு போன் செய்து பேசி விட்டு நானும் எனது மகளும் தான் சண்டை போட்டுக் கொண்டோம் என்றாலும் சரியல்ல. உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் நடைபெற்று இருந்தால் நான் கொடுத்த வாக்குமூலங்களில் சம்பவத்தின் போது எனது தம்பி ரமேஷ் குமார் உடன் இருந்ததாக சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. காவல்துறை விசாரணையின் போது எனது மகள் எனது மருமகனுடன் செல்ல தயாராக இருந்ததாக நான் சொன்னேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

7. பிரச்சனைக்கு பிறகு எனது மருமகளுடன் இது குறித்து நான் பேசவில்லை. உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எனது மருமகன் சம்பவத்தன்று அங்கு வரவே இல்லை என்றாலும் உண்மையில் அவ்வாறு நடந்திருந்தால் அதன் பின்னிட்டு எனது மருமகனை அளித்து நான் பேசியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—01.04PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**